## பத்திரிக்கைச் செய்தி

செ.வெ.எண்:41 நாள்: 28.09.2010

### அகதிகள் முகாமில் தங்கியுள்ள இலங்கை வாழ் தமிழர்கள் உரிய அனுமதியின்றி வெளிநாடு சென்று இன்னல்களுக்கு ஆளாக வேண்டாம் என்று மாநில மறுவாழ்வுத்துறை ஆணையர் திரு.முத்தையா கலைவாணன் அவர்கள்- எச்சரிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், தோப்புக்கொல்லையில் இலங்கைவாழ் தமிழர்கள் (அகதிகள்) முகாமில் கழிவுநீர் கால்வாய்கள், 2 மேல்நிலை நீர்தேக்க தொட்டி, குடிநீர் வசதி மற்றும் வீடுகள் சீரமைப்பு பணிகள் நடைபெறுவதை மாநிலநல்வாழ்வுத்துறை ஆணையர் திரு.முத்தையா கலைவாணன் இ.ஆ.ப அவர்கள் ஆய்வு செய்து குறைகளைக் கேட்டறிந்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், தோப்புக்கொல்லை இலங்கைவாழ் தமிழர்கள் முகாமை மறுவாழ்வுத்துறை ஆணையர் திரு.முத்தையா கலைவாணன் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, இலங்கைவாழ் தமிழர்களிடம் குறைக-ளைக் கேட்டறிந்தார்.

அப்போது முகாம்வாழ் மக்கள் பழுதடைந்த குடிநீர் குழாய்களை சீரமைக்கவும், மின்சாரம் சீரான முறையில் கிடைப்பதற்கு கூடுதாலாக டிரான்ஸ்பார்மர் தேவை என்றும் , கூடுதல் குடியிருப்புகள் கட்டித்தரும்படியும், கழிவு நீர் கால்வாய்களை சீரமைத்து தரும்படியும், திருமணமான பெண்கள் முகாமை விட்டுச் செல்ல அனுமதிக்கும்படியும், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை வழங்கும்படியும், ஏற்கனவே திருமணம் முடித்து இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளவர்களுக்கு பதிவு செய்வதற்கு ஆவன செய்யும் படியும் போன்ற கோரிக்கைகளை மறுவாழ்வுத்துறை ஆணையரிடம் மனுக்காளக வழங்கினார்கள்.

அவர்களது கோரிக்கைகளின் மீது திருமணம் முடித்து இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளவர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி பதிவுத்துறைக்கு அறிக்கை அனுப்பிவைத்து அவர்களது திருமணத்தை பதிவு செய்யும்படியும்படி, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க ஆவனம் செய்யும்படியும் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உடன் நடவடிக்கை எடுத்து நிறைவேற்ற மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், முகாம்களில் உள்ள இலங்கைவாழ் தமிழர்கள் சிலா் தனியார் நிறுவனங்களின் தூண்டுதலின் பேரில் உரிய அனுமதியின்றி வெளிநாடு செல்வதாகவும், அவ்வாறு செல்வபர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள் என்றும்

எனவே, இத்தகைய தவறான முடிவுகள் எவரும் எடுக்க வேண்டாம் என்றும், எச்சரிக்கையுடன் இருக்கும்படியும் என்று தெரிவித்ததுடன், இத்தகைய தவறான முடிவுக்கு தூண்டும் நபர்களைப் பற்றி உடன் அரசுக்கு தெரிவிக்கும்படியும், அவர்களிடம் மாநில் மறுவாழ்வுத்துறை ஆணையர் திரு.முத்தையா கலைவாணன் இ.ஆ.ப, அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வின் போது புதுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் திரு.ஆர்.கங்காதரன், தனி வட்டாட்சியர்(மறுவாழ்வு) திரு.பி.புகழேந்தி, ஆலங்குடி வட்டாட்சியர் திரு.எம். இராமர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பிரகாசம், திருவரங்குளம்ளள வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.மல்லிகா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.